கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு
இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனம்

விலைமனுக்களுக்கான அழைப்பு

1. தேசிய போட்டிரீதியான விலைமனு மூலம் கீழுள்ள வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதி பெற்ற விலைமனுதாரர்களிடம் இருந்து ''இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்தின்'' சார்பில் திணைக்கள பெறுகைக் குழு. தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோருப்படுகின்றன.
2. விலைமனுதாரர் பின்வரும் தகைமை அளவுகோளை கொண்டிருத்தல் வேண்டும்
   - விலைக்கேட்பு மற்றும் ஒப்பந்தம் வழங்கும் நேரத்தில் விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும்.
   - விலைமனு சமர்ப்பிக்கும் நேரத்தில் C6, C5 மற்றும் C4 தரத்தில் கடல்சார் நிர்மாணம் அல்லது நெடுஞ்சாலை நிர்மாணத் துறையில் CIDA பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.

ஒப்பந்த இல.	பெறுகை பெயர்	வேலை நோக்கம்	பொறியியலாளர் மதிப்பீடு	தகைமை அளவுகோள்	நிர்மாணக் காலம்	வங்கி உத்தரவாதம் மற்றும் செல்லுபடி	விலைனுவுக்கு முந்திய கூட்டம்
CFHC/PD/ QWBRR/ PRN/2026-106	புராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்தில் துறைமுகத் தடுப்புச் சுவரைப் புதுப்பித்தல், அலைத்தடுப்பு வீதி மேற்பரப்பை புனரமைத்தல் மற்றும் உள் வீதிகளைப் புனரமைத்தல்.	இந்தப் பணியில் துறைமுகத் தடுப்புச் சுவரைப் புதுப்பித்தல், அலைத்தடுப்பு வீதி மேற்பரப்பில் சேதமடைந்த பகுதிகளைப் புனரமைத்தல் மற்றும் உள் வீதிகளைப் புனரமைத்தல் ஆகியவை அடங்கும்.	தோராயமான பொறியியல் மதிப்பீட்டுச் செலவு வெட் மற்றும் எதிர்பாராச் செலவுகள் இன்றி 29.4 மில்லியன்	கடந்த ஐந்து ஆண்டுகளில் (2019, 2020, 2023, 2024, 2025) மேற்கொண்ட நிர்மாண வேலைகளின் சராசரி ஆண்டுப் பெறுமதி குறைந்தது இ.ரூபா 29.4 மில்லியன் இருத்தல் வேண்டும். கடந்த 10 ஆண்டுகளில், இப்பணிகளுக்கு ஒத்த தன்மை மற்றும் சிக்கற்பாடுடைய குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தை பிரதான ஒப்பந்ததாரராக மேற்கொண்ட அனுபவம் இருத்தல் வேண்டும். (இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, குறிப்பிடப்படும் பணிகளில் குறைந்தது 70% நிறைவடைந்திருத்தல் வேண்டும்.) இலங்கை ரூபா 20.6 மில்லியன் வேறு ஒப்பந்தப் பொறுப்புகளுக்கான தொகைகளைக் கழித்த பின்னரும், ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படக்கூடிய முற்பணங்களைத் தவிர்த்தும், திட்டம் நிறைவடையும் திகதி வரை, ஒப்பந்ததாரரிடம் இருக்க வேண்டிய குறைந்தபட்ச திரவச் சொத்துகள் மற்றும்/அல்லது கடன் வசதிகளின் தொகை, இலங்கை ரூபா 29.4 மில்லியனுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். ரூபா 5 மில்லியன் என்ற விலைமனு தொகையை விஞ்சும் ஒவ்வொரு விலைமனுவுக்கும், 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்படி, பொது ஒப்பந்தப் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் சான்றிதழை விலைமனுதாரர் வைத்திருத்தல் வேண்டும். ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைகளில் இதுவும் ஒன்றாகும்.	இந்த விலை மனுவுக்கான நிர்மாணக் காலம் 120 நாட்காட்டி தினங்கள் என்பதோடு மாத்தறை மாவட்டம், புராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்தில் இந்தத் திட்டத்தின் இடம் அமைந்துள்ளது.	ரூபா 400,000.00 2027.02.22 வரை செல்லுபடி	2026.10.14 அன்று மு.ப. 10.30 இடம்: நிர்வாக குழு அறை, இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனம், இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15
CFHC/PD/ WQW/ MIR/2026-107	மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தில் புதிய முறைமுக தடுப்புச் சுவரின் நிர்மாணம்	இந்தப் பணியில் கேபியன் மற்றும் வலுவூட்டப்பட்ட கொங்கிறீற் (RC) கொண்டு புதிய துறைமுகத் தடுப்புச் சுவர் அமைத்தல் அடங்கும்.	தோராயமான பொறியியல் மதிப்பீட்டுச் செலவு வெட் மற்றும் எதிர்பாராச் செலவுகள் இன்றி 35.7 மில்லியன்	கடந்த ஐந்து ஆண்டுகளில் (2019, 2020, 2023, 2024, 2025) மேற்கொண்ட நிர்மாண வேலைகளின் சராசரி ஆண்டுப் பெறுமதி குறைந்தது இ.ரூபா 35.7 மில்லியன் இருத்தல் வேண்டும். கடந்த 10 ஆண்டுகளில், இப்பணிகளுக்கு ஒத்த தன்மை (கேபியன் சுவர் கட்டுமானம்) மற்றும் சிக்கற்பாடுடைய குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தை பிரதான ஒப்பந்ததாரராக மேற்கொண்ட அனுபவம் இருத்தல் வேண்டும். இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, குறிப்பிடப்படும் பணிகளில் குறைந்தது 70மூ நிறைவடைந்திருத்தல் வேண்டும். இலங்கை ரூபா 24.9 மில்லியன். வேறு ஒப்பந்தப் பொறுப்புகளுக்கான தொகைகளைக் கழித்த பின்னரும், ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படக்கூடிய முற்பணங்களைத் தவிர்த்தும், திட்டம் நிறைவடையும் திகதி வரை, ஒப்பந்ததாரரிடம் இருக்க வேண்டிய குறைந்தபட்ச திரவச் சொத்துகள் மற்றும்/அல்லது கடன் வசதிகளின் தொகை, இலங்கை ரூபா 17.85 மில்லியனுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். ரூபா 5 மில்லியன் என்ற விலைமனு தொகையை விஞ்சும் ஒவ்வொரு விலைமனுவுக்கும், 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்படி, பொது ஒப்பந்தப் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் சான்றிதழை விலைமனுதாரர் வைத்திருத்தல் வேண்டும். ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைகளில் இதுவும் ஒன்றாகும்.	இந்த விலைமனுவுக்கான நிர்மாணக் காலம் 180 நாட்காட்டி தினங்கள் என்பதோடு மாத்தறை மாவட்டம், மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தில் இந்தத் திட்டத்தின் இடம் அமைந்துள்ளது.	ரூபா 450,000.00 2027.02.22 வரை செல்லுபடி	2026.10.14 அன்று மு.ப. 11.00 இடம்: நிர்வாக குழு அறை, இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனம், இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15

4. ஆர்வமுடைய ஒற்றை மற்றும் கூட்டு முயற்சி விலைமனுதாரர்கள் 011-2527439 என்ற தொலைபேசி இலக்கத்தில் கொழும்:பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இல. 15, இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபன, சிவில் பொறியியல் பிரிவு சிவில் பொறியியல் முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு ''கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இல. 15, இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனம், பெறுகைப் பிரிவு'' அலுவலகம் அல்லது தொடர்புடைய மீன்பிடித் துறைமுகங்களில் விலைமனு ஆவணங்களை (கட்டணம் இன்றி) பரீட்சிக்க முடியும்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 ரூபாவை (ஒவ்வொரு பெறுகைக்காகவும்) செலுத்தி 2026.10.05 ஆம் திகதி தொடக்கம் 2026.10.26 ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை ''கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இல. 15, இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனம், பெறுகை முகாமையாளருக்கு'' வர்த்தகக் கடிதத் தலைப்பில் எழுத்துமூல கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான பெறுகை ஆவணத்தின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
6. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2026.10.27 ஆம் திகதி மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகை பிரிவு, இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனம், இல. 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15'' என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். (விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்).
7. விலைமனுக்கள் 2027.01.25 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும் (91 நாட்காட்டி தினங்கள்).
8. அனைத்து விலைமனுக்களும் ''கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை மற்றும் த.பெட்டி 1747, இல. 15, இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபன, தலைவரின்'' பெயரில் வரையப்பட்ட நிலையான படிவம் பிரிவு 9 இல் உள்ளடக்கப்பட்ட வடிவில் (அசல் வைப்பு ரசீதை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும்) விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியில் இருந்து 119 நாட்காட்டி தினங்கள் வரை (2027.02.22) செல்லுபடியான விலைமனு பிணை ஒன்றை (வங்கி உத்தரவாதம் அல்லது மீளளிக்கப்படும் ரொக்கப்பண வைப்பு) கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். ரொக்கப்பண வைப்பும் ஏற்கப்படும்.
9. அனைத்து விலைமனுதாரர்களும் 2007 ஜனவரி, இரண்டாவது பதிப்பு, CIDA/SBD/01 இனை கவனமாக வாசிப்பதற்கு தயவுடன் கோரப்படுகின்றனர்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனம், இல. 15,
ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15.